பாரதிதாசன் மொழிபெயர்ப்பு படைப்புகளின் மதிப்பீடு
(Evaluation of Translated works of Bharathiidasan)

முனைவர் ராஜேந்திரன் சங்கரவேலாயுதன்
அம்ரிதா விஸ்வ வித்யாபீடம்
கோயம்புத்தூர்
rajushush@gmail.com

1. அறிமுகம்

பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். நவீன தமிழ் இலக்கியத்தில் சிறந்த கவிஞர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். தொண்ணூறுகளில் தான் பாரதிதாசனின் படைப்புகளை மொழிபெயர்க்கும் ஆர்வம் ஏற்பட்டது. இவ்வார்வம் தமிழ்நாட்டு அரசால் நடத்தப்பட்ட பாரதிதாசன் நூற்றாண்டு கொண்டாட்டத்தால் தூண்டப்பட்டது எனலாம். பாரதிதாசனின் படைப்புகளை மொழிபெயர்ப்பதில் சில தனிப்பட்ட முயற்சிகள் இருந்தாலும், அவரது படைப்புகளை மொழிபெயர்ப்பதற்கான முக்கிய முயற்சிகள் சில நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன. பாரதிதாசன் பல்கலைக்கழகமும் பாண்டிச்சேரி மொழியியல் மற்றும் மற்றும் பண்பாடு நிறுவனமும் மார்க்சிஸ்ட் பெரியார் கம்யூனிஸ்ட் கட்சியும் பாரதிதாசன் கவிதைகளின் மொழிபெயர்ப்பை ஒவ்வொரு தொகுதியாக வெளியிட்டன. முதல் இரண்டு தொகுதிகளும் பல பங்களிப்பாளர்களின் சேகரிப்பு ஆகும்; மூன்றாவது ஒரு தனிப்பட்ட பங்களிப்பாளரின் தொகுப்பு ஆகும். தனிப்பட்ட முயற்சிகளில் தங்கப்பா மற்றும் தக்ஷிணமூர்த்தி ஆகியோரின் படைப்புகளை மேற்கோளாகக் காட்டலாம். வெளியிடப்படாத படைப்புக்களும் உள்ளன. ஏ.சி.செட்டியாரின் படைப்புகளை இந்த வகையின் மேற்கோளாகக் காட்டலாம்.

பாரதிதாசனின் படைப்புகள் முக்கியமாக ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டாலும் இந்திய மொழிகளில் அவரது படைப்புகளை மொழிபெயர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட படைப்புக்கள் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டவைகளை விட அதிக எண்ணிக்கையில் இருப்பதாகத்

தோன்றுகின்றது. பாரதிதாசனின் உரைநடை மற்றும் கவிதை படைப்புகள் இரண்டும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன; ஆனால் கவிதை மொழிபெயர்ப்புப் படைப்புகள் உரைநடைப் மொழிபெயர்ப்புப் படைப்புகளை விஞ்சியுள்ளன. மொழிபெயர்க்கப்பட்ட படைப்புக்கள் இருமொழிய மற்றும் ஒருமொழிய இயல்புடையவை. முந்தையவை தமிழ் பனுவல்களை மொழிபெயர்க்கப்பட்ட பனுவலுடன் சேத்துத் தரும். பிந்தையவை மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பை மட்டும் தரும். இருமொழிய மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள் ஒரு மொழிய மொழிபெயர்ப்பட்ட படைப்புகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உள்ளன என்று தோன்றுகிறது.

மூல கவிதைப் படைப்புகளின் மேதைத்தன்மையை மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகளின் வரையறுக்கப்பட்ட நியதியால் சரியான வகையில் வெளிப்படுத்த இயலாது என்று ஒருவர் சொன்னால் அது ஒரு மிகையாகாது. மதிப்பீட்டாளர் ஒரு இலக்கிய விமர்சகரின் பக்கமோ அல்லது ஒரு மொழி ஆய்வாளரின் பக்கமோ சாய இயலாது. அவர் தீவிரமாக ஒரு பக்கத்தைச் சாரும் ஆபத்துக்களைத் தாண்டி ஒரு கயிற்றில் நடக்க வேண்டும். உண்மையைக் கூறினால் மொழிபெயர்ப்பு துல்லியமான மொழிபெயர்ப்புக்கும் மொழிபெயர்ப்பு ஆக்கத்திற்கும் இடையே ஊசலாடும் என்பதால் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைப் படைப்பின் மதிப்பீடு எளிதான செயலன்று. மதிப்பீட்டாளரின் பணி வினாவுக்கு உட்படுத்தப்படலாம் அல்லது அவரது பணிக்கான எதிர்பார்ப்பை நியாப்படுத்த இயலாமல் போகலாம்; ஏனென்றால் அவரது பங்களிப்பு மொழியியல் ஆய்வாளருக்கும் இலக்கிய விமர்சகர்களுக்கும் இடையில் ஊசலாடக்கூடும். மேலும் தமிழ் இலக்கிய சமுதாயத்தில் இன்னும் இலக்கிய விமர்சனம் ஒரு வரவேற்கத்தக்க விஷயம் அல்ல. தமிழ் இலக்கிய விமர்சகர்களை விட இலக்கியப் பாராட்டாளர்கள் மட்டுமே உள்ளனர். மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளர்கள் கூட இந்த நெறிமுறை அல்லது போக்கிலிருந்து முற்றிலும் சுதந்திரமானவர் அல்ல. இந்த முன்னுரையுடன் எனது குறிக்கோளை எடுத்துக்கொள்கின்றேன். அவ்வாறு செய்வதற்கு முன்னர், காலத்தின் குறைவாலும் எல்லா மொழிபெயர்ப்புப் படைப்புகளையும் பெற இயலவில்லை என்ற காரணத்தாலும் பாரதிதாசனின் அனைத்து மொழிபெயர்ப்பு படைப்புகளையும் என்னால் ஆய இயலவில்லை. மேலும் இது மொழிபெயர்ப்புப் படைப்புகளை மதிப்பிடுவதில் ஆழமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீவிரமான ஆய்வு அல்ல என்பதை நான் குறிப்பிட

விரும்புகிறேன். பாரதிதாசனின் படைப்புகளின் மொழிபெயர்ப்புகள் பற்றிய ஒரு ஆழ்ந்த ஆய்வு தேவை; இது இங்கு முயற்சிக்கப்படவில்லை.

2. மொழிபெயர்ப்பு மதிப்பீடுக் கோட்பாடு

பாரதிதாசன் மொழிபெயர்க்கப்பட்ட பனுவலகளுக்குள் நேரடியாக நுழைவதற்கு முன், மொழிபெயர்க்கப்பட்ட பனுவல்களின் மதிப்பீட்ற்குப் பின்னால் உள்ள கோட்பாட்டை புரிந்து கொள்ளவது நமக்கு நல்லது. மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியப் பனுவலை மதிப்பீடு செய்யும் போது ஒரு மதிப்பீட்டாளர் குறைந்தபட்சம் பின்வரும் மூன்று நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முற்படுகிறார். அவையாவன:

1. மொழியியல் அளவீடு
2. நடையியல் அளவீடு
3. மொழிபெயர்ப்பு அளவீடு

2.1. மொழியியல் அளவீடு

மொழியியல் அளவீடு பின்வரும் மூன்று அளவீடுகளை உள்ளடக்கும்:

1. சொல்சார் அளவீடு,
2. கட்டமைப்பு அளவீடு மற்றும்
3. பொருண்மையியல்-பயன்வழியியல் அளவீடு

சொல்சார் அளவீடு பின்வரும் விஷயங்களின் நிறைவேற்றத்தை கோருகின்றன:

1. கலைச்சொற்களின் பொருத்தமான மொழிபெயர்ப்பு
2. சமூக \ கலாச்சார சொற்களின் பொருத்தமான மொழிபெயர்ப்பு
3. மூல மொழிக்கும் இலக்குமொழிக்கும் இடையே சமநிலையை நிறுவ மூல மொழிப் பனுவலின் புத்தாக்கங்களை இலக்கு மொழிப் பனுவலில் ஆக்குதல்
4. குறிக்கோள் பொருளைத் தக்கவைத்தல்

5. உணர் பொருளைப் பாதுகாத்தல்

கட்டமைப்பு அளவீடு பின்வரும் விஷயங்களை உள்ளடக்கும்:

1. மூலமொழிக் கட்டமைப்பைத் தக்கவைத்தல்
2. மூலமொழிக்கும் இலக்குமொழிக்கும் இடையில் சமநிலையை வைத்திருக்க மாற்றப்பட்ட இலக்குமொழி கட்டமைப்பைப்பு

பொருண்மையியல்-பயன்வழியியல் அளவீடு பின்வரும் விஷயங்களை உள்ளடக்கும்:

1. மூலமொழிப் பனுவலின் சமூக சூழலை இலக்குமொழிப்பனுவலில் தக்க வைத்தல்
2. மூலமொழிப்பனுவலின் உணர்ச்சிகளை / உணர்வுகளை இலக்குமொழிப் பனுவலில் பாதுகாத்தல்
3. மூலமொழிப் பனுவலின் ஒட்டுமொத்த பொருளை / உட்பொருளை இலக்குமொழிப் பனுவலில் பாதுகாத்தல்
4. மொழிபெயர்க்கையில் மொழிபெயர்ப்பாளரின் துல்லியம்/செறிவு/தீவிரம்
5. இலக்குமொழியைப் பனுவலை உருவாக்குகையில் மூலமொழிப்பனுவலில் உள்ள அனைத்து தகவல்களையும் உள்ளடக்குதல்
6. உருவங்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம்
7. மூலமொழிப்பனுவலின் செயல்பாட்டை இலக்குமொழிப் பனுவலில் தக்கவைத்தல்.

2.2. நடையியல் அளவீடு

மூலமொழிப் பனுவல் மற்றும் இலக்குமொழி பனுவல் ஆகியவற்றின் இயல்புகளைப் பொறுத்து மொழிபெயர்ப்பாளர் பல நடைகளிலிருந்து பொருத்தமானதை தேர்வு செய்ய வேண்டும். குறைந்தது ஆறு வகையான நடைகளை அடையாளம் காணலாம்:

1. தகவல் கூறும் நடை: மூலமொழிப் பனுவலில் உள்ளடங்கியுள்ள தகவல்களை அதிக அளவில் இலக்குமொழியில் உள்ளடக்க மொழிபெயர்ப்பாளர் அதிக ஆர்வமாக

இருந்தால், அவர் தகவல் கூறும் நடையைப் பயன்படுத்தக்கூடும். இந்த நடை பெரும்பாலும் தொழில்நுட்ப மற்றும் அறிவியல் நூல்களுடன் தொடர்புடையது.

2. இயல்பான நடை: மொழிபெயர்ப்பாளர் இலக்குமொழியின் இயல்பான ஓட்டதைப் பின்பற்றி அதை மொழிபெயர்க்கப்பட்ட பனுவலில் பயன்படுத்தும் போது அது கட்டமைப்பு மற்றும் நடையில் மூலமொழியிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருந்தால் கூட அது இயல்புநடை என்று அழைக்கப்படும்.

3. புறவயமான நடை: மொழிபெயர்ப்பாளர் தனது நடுநிலைமையைத் தக்க வைத்துக் கொண்டு மூலமொழிப் பனுவலை புறவயமாக இலக்குமொழிக்கு மீட்டுருவாக்கம் மட்டும் செய்தால் அது புறவயமான நடையாகும். இந்த புறவயமான நடை தகவல் அணுகுமுறையில் பயன்படுத்தப்படுகிறது.

4. ஏவல் நடை: மொழிபெயர்ப்பாளர் நேருக்கு நேர் அதிகாரத்தின் உணர்வை / கட்டளையிடும் உறவை இலக்குமொழி வாசகர்களிடம் வெளிப்படுத்தினால் அது ஏவல் நடை என்று அழைக்கப்படும்.

5. தன்வசப்படுத்தும் நடை: இலக்குமொழி வாசகர் மொழிபெயர்க்கப்பட்தை வாசிக்குமாறும் அதை ஒரு குறிப்பிட்ட முறையில் எதிர்வினை செய்யுமாறும் மொழிபெயர்ப்பாளர் மூலமொழிப் பனுவலின் செய்தியை இலக்கு மொழியில் வெளியிடுகின்ற நடை தன்வசப்படுத்தும் நடை ஆகும்.

6. தனிப்பட்ட / தனித்துவமான நடை: மொழிபெயர்ப்பாளர் நடையியல் அடிப்படையில் மூலமொழியின் ஆசிரியரிடமிருந்து வேறுபடாமல் மற்றும் இலக்குமொழியின் இயல்பான நடையைப் பின்பற்றாமல் இலக்கண / சொல் விலகல்களின் மூலோபாயத்தை பயன்படுத்தினால் அது தனிப்பட்ட / தனித்துவமான நடை என்று அழைக்கப்படுகிறது.

2.3. மொழிபெயர்ப்பு அளவீடுகள்

மொழிபெயர்ப்பு அளவீடுகள் (1) கருத்துப்பரிமாற்ற மொழிபெயர்ப்பு, (2) புலனறிவு மொழிபெயர்ப்பு மற்றும் (3) பொருண்மை மொழிபெயர்ப்பு என்பனவறை உட்படுத்தும்.

மூலமொழி வாசகர்களால் பெறப்பட்ட விளைவை இலக்குமொழி வாசகர்களுக்கு மறுவாக்கம் செய்ய கருத்துப்பரிமாற்ற மொழிபெயர்ப்பு முயற்சிக்கிறது. புலனறிவு மொழிபெயர்ப்பு ஒரு முன்-மொழிபெயர்ப்பு முறையை குறிக்கிறது; இது மூலமொழிப் பனுவலை பொருண்மை மயக்கம் இல்லாமல் இலக்குமொழிப் பனுவலாக மாற்றுவதற்குச் செய்யப்படலாம். மூலமொழிப் பனுவலில் கூறப்பட்டுள்ள சரியான சூழ்நிலையின் அர்த்தத்தை விளக்கும் வகையில் பொருண்மைசார் மொழிபெயர்ப்பு நடக்கிறது. பொருண்மைசார் மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளர் மூலமொழியில் உள்ள செய்தியின் சாராம்சத்தை நூலாசிரியர் விரும்பியபடி தக்கவைகின்றார்; இங்கு மொழிபெயர்ப்பாளர் சொற்களுக்கு முக்கியத்துவம் தராமல் பொருளடக்கத்திற்கு முக்கியத்துவம் தருகின்றார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பொருண்மை மொழிபெயர்ப்பு என்பது ஒரு பொருண்மை-பயன்வழியியல் சார்ந்த மொழிபெயர்ப்பாகும்; இது கட்டமைப்பு அடிப்படையிலான அல்லது சொல் அடிப்படையிலானதோ அல்ல.

பாரதிதாசனின் படைப்புகள் சில மொழிபெயர்ப்புகளை மதிப்பீடு செய்தல்

மதிப்பீடு செய்வதற்கு பாரதிதாசனின் ஆறு மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. அறிமுகத்தில் கூறியது போல் இது ஒரு முழுமையான் மதிப்பீடு அல்ல; இது ஒரு நீட்டிக்கப்பட்ட திறனாய்வு என்று கூட கூறலாம்.

3.1. புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு

Puratci Kavignar Bharathidasan's Smile of Beauty (புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு) என்ற மொழிபெயர்ப்பு நூலில் மொழிபெயர்ப்பாளர் பரமேஸ்வரன் அவர்கள் முதலில் தமிழ்க் கவிதைகளையும் இரண்டாவது அதன் ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் தருகின்றார். அவரது நடை எளிமையானது மற்றும் மொழிபெயர்ப்பு மூலப் பதிப்பில் இருந்து அதிக அளவில் விலகி நிற்கவில்லை.

தமிழ் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் மொழிபெயர்ப்பவர் மொழிக் கட்டமைப்பில் சில சமரசங்கள் செய்யவேண்டிவரும்; இதனால் மொழிபெயர்ப்பு தகவல் இழப்பு, மிகைப் பொதுமையாக்கம், குறைப் பொதுமயமாக்கம், உணர்ச்சிவேகம், உணர்ச்சித் தாக்கம் போன்றவற்றை இழத்தல் என்பனவற்றை வெளிப்படையாக வெளிப்படுத்தும். பரமேஸ்வரன் அவர்கள் மொழிபெயர்ப்பிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ள பின்வரும் கவிதை வரிகளில் சொற்கள், அவற்றின் வரிசைமுறை மற்றும் நடை ஆகியவற்றின் தேர்வு காரணமாக மூலக்கவிதையின் பண்புக்கூறுகள் மொழிபெயர்ப்பில் இழக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

தமிழ்	**ஆங்கிலமொழிபெயர்ப்பு**
இருளின் பகலாடை இரவாடை விண்முதல் மண் வரைக்கும் வியக்கும் உன் மேனி தனைக் கண்ணிலே காண்பேன்: நீயோ அடிக்கடி உடையில் மாற்றம் பண்ணுவாய் இருளே உன்றன் பகல் உடை தங்கச்சேலைமேல் வேலைப்பா டென்ன சொல்வேன்!	Admire I your body Spreading from earth to sky Alter you your apparel So often O darkness! Gold saree your diurnal Dress is; O what filigree Work on the white silk on Your nocturnal saree!

சில நேரங்களில் மொழிபெயர்ப்பாளர் சொற்றொடர் அல்லது கூட்டின் வழியாகத் தெரிவிக்கப்படும் மரபுப் பொருளைப் புரிந்துகொள்ளாமல் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பை நாடுவர். பின்வரும் கவிதைவரிகள் மேற்கூறிய தகவலுக்கு எடுத்துக்காட்டாக அமையும்.

தமிழ்	**ஆங்கிலமொழிபெயர்ப்பு**
கிழக்குப் பெண் விட்டெறிந்த	The parrot winged ball of Phoebes cast by

கிளிச்சிறைப் பருதிப் பந்து	the woman of the East

கிளிச்சிறை "கிளியின் சிறகின் நிறத்தை ஒக்கும் தங்கம், நான்கு விதமான தங்கங்களில் ஒன்று" எனப் பொருள்படும். மொழிபெயர்ப்பாளர் வெளிவட்டக்கூட்டின் பொருள்கோளைத் தவறாகத் தந்து தவறிழைக்கின்றார்.

பின்வரும் வரிகளில் மூல ஆசிரியரால் பயன்படுத்தப்படும் கூட்டுத் தொடர் மொழிபெயர்ப்பாளரால் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

தமிழ்	**ஆங்கிலமொழிபெயர்ப்பு**
பாற்புகை முகிலை சீய்த்து பளிச்சென்று "திங்கட் சேவல்"	Cleaving the milk-smoke-like cloud emerges the moon cock

3. 2. அமைதி: ஒரு ஊமை நாடகம்

பாரதிதாசனின் 'அமைதி' என்ற நாடகத்தின் மொழிபெயர்ப்பு சலபதி அவர்களால் 'Tranquillity: a mute play' (அமைதி: ஒரு ஊமை நாடகம்) என்ற பெயரில் 1987ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பாரதிதாசன் ஒரு சில உரைநடைகளை மட்டுமே எழுதியிருக்கின்றார். பாரதிதாசன் முக்கியமாக ஒரு கவிஞனாக மிளிர்ந்ததால் தமது உரைநடைகளைத் தீவிரமாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை; மேலும் அவர் இப்படைப்புகளை மிகவும் மேலோட்டமான நிலையில் எழுதியுள்ளார் என்பதை உணரலாம். மொழிபெயர்ப்பு "Tranquillity" 48 பக்கங்களைக் கொண்டுள்ளது. இதில் மொழிபெயர்ப்பாளரின் குறிப்பிற்கு 5 பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; "Revolutionary Poet" என்ற தலைப்பில் தங்கப்பா அவர்களின் 16 பக்க குறிப்பையும் 23 பக்க மொழிபெயர்ப்பையும் கொண்டுள்ளது. இந்தப் படைப்பு பற்றி கூடுதலாகக் கருத்து தெரிவிக்க இயலவில்லை. மொழிபெயர்ப்பு எளிமையானது மற்றும் மொழிபெயர்ப்பாளர் மூலத்தின் உணர்ச்சி வேகத்தையும் நடையையும் தக்கவைக்க முயலுகின்றார் என்று கூறலாம்.

3.3. பாரதிதாசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்-1

பாரதிதாசனை தத்துவவாதிகளில் ஒருவராக கருதுதி பெரியார் கம்யூனிஸ்ட் கட்சி Select Poems of Bharathidasan (பாரதிதாசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்) என்ற நூலை வெளியிட்டுள்ளது. பாரதிதாசனால் எழுதப்பட்ட சில கவிதைகளை மொழிபெயர்த்து ஒரு தொகுப்பாக வெளியிடும் வேலை தாங்கப்பா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நூல் 1992ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மூலக் கவிதைகள் இடது பக்கத்திலும் அவற்றின் மொழிபெயர்புகள் நூலின் வலது பக்கத்திலும் தரப்பட்டுள்ளன. இந்த தொகுப்பில் 88 பக்கங்கள் உள்ளன. 25 கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை ஆறு பரந்த தலைப்புகளின் கீழ் குழுக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் பட்டியலில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இந்த பரந்த தலைப்புகளும் அவற்றின் கீழ் வரும் கவிதைகளின் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன:

	பாரதிதாசன் கவிதை	**மொழிபெயர்ப்பு**	**எண்ணிக்கை**
1	இயற்கை	On Nature	5 கவிதைகள்
2	தமிழ்	On Tamil	2 கவிதைகள்
3	தமிழ் விடுதலை	On Tamil's Liberation	2 கவிதைகள்
4	பெண் விடுதலை	On Women's Liberation	2 கவிதைகள்
5	தொழிலாளர் விடுதலை	On emancipation of Workers	3 கவிதைகள்
6	பெரியார்	Periyar	1 கவிதை

தாங்கப்பா அவர்கள் கவிஞர் மீது கொண்டிருந்த பக்தி காரணமாகவும் அவருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு காரணமாகவும் (ஆயிரத்தித் தொள்ளாயிரத்து) எண்பதுகளில் பாரதிதாசனின் கவிதைகளை மொழிபெயர்ப்பதில் ஆர்வமாக இருந்த ஒருவராவார். அவரது நடையும் மொழியும் எளிமையானதாகும். மூலக்கவிதைகளில் வெளிப்படும் உணர்ச்சித் தாக்கத்தை மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பில் வெளிப்படுத்தும் அவரது ஆர்வம், அவரது சொற்கள் மற்றும்

சொற்றொடர்களின் தேர்வு மற்றும் மூலகருத்துக்களை வெளிப்படுத்தத் தேர்வுசெய்த நடையில் பிரதிபலிக்கின்றது. அவரது மொழிபெயர்ப்பைப் பிற மொழிபெயப்புகளுடன் ஒப்பிடுவதன் மூலம் இதை அறியலாம்.

பாரதிதாசன் கவிதை	தங்கப்பா அவர்களின் மொழிபெயர்ப்பு	முருகன் அவர்களின் மொழிபெயர்ப்பு
துன்பம் பிறக்குந்தல் இன்பம் தமக்குமென்னும் துட்ட மனோபாவம் அன்பினை மாய்க்கும்; அறங்குலைக் கும்; புவி ஆக்கந் தனைக் கெடுக்கும்	"Let others suffer But let us have pleasure" This is a wicked attitude That kills love Upsets order And blocks the world's progress.	The mentality abject and wicked 'Pleasure to me and pain unto others' Will kill love, dissolve virtue and dissipate mankind's progress

மேற்கண்ட எடுத்துக்காட்டு தங்கப்பா மற்றும் முருகன் என்போரின் மொழிபெயர்ப்பு உபாயங்களை வெளிப்படுத்தும்.

பின்வரும் மொழிபெயர்ப்புகளைக் கருத்தில் கொள்ளவும்

பாரதிதாசன் கவிதை	**தங்கப்பா அவர்களின் மொழிபெயர்ப்பு**	**தக்ஷிணாமூர்த்தி அவர்களின் மொழிபெயர்ப்பு**
நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து நிலவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக் கோலமுழு தும் காட்டி விட்டால் காதற் கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?	Veiled in the blue mantle of the sky Showing your face as the moon, Fearing that the world may die of love If your beauty is revealed in full?	Covering up your person in full With your garment, the blue hued sky You expose only your glittering face called moon! What wrong will befall you If you expose your beauty in full?

சில நேரங்களில் ஒரு மொழிபெயர்ப்பாளர் மூல நூலில் கொடுக்கப்படாத தகவலை கூடுதலாகத் தரலாம் அல்லது புனரமைக்கலாம்; இதனால் மொழிபெயர்ப்பு மூலத்திலிருந்து விலகிநிற்கும். தாங்கப்பா அவர்களின் பின்வரும் மொழிபெயர்ப்பானது இந்த கூற்றை எடுத்துக்காட்டும்.

பாரதிதாசன் கவிதை	**தங்கப்பாவின் மொழிபெயர்ப்பு**
வானவீதியில் வந்து திரிந்து	Sweeping past the clouds in sweet sunshine

தென்னங் கீற்றுப் பொன்னூஞ்சல் ஆடிச் சோலையினின்ரு சாலையில் மேய்ந்து வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!	She roams about the sky at will, Swings on the swaying coconut fronds Frisks and gambols in the woods And picks up grains by the roadside Heaven and earth belong to her.

3.4. பாரதிதாசன் கவிதைகள் (ஒரு மொழிபெயர்ப்பு)

1990இல் வெளியான "Poems of Bharathidasan (a translation)" (பாரதிதாசனின் கவிதைகள் (ஒரு மொழிபெயர்ப்பு)) தக்ஷிணமூர்த்தி அவர்களின் மொழிபெயப்பு நூலாகும். இந்நூல் 73 பக்கங்கள் கொண்டது. இதில் 2 பக்கங்கள் முன்னுரை வழங்குவதற்கும் விமர்சன மதிப்பீடுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன; 16 பக்கங்கள் அறிமுகப்படுத்துவதற்குத் தரப்பட்டுள்ளன; 2 பக்கங்கள் நன்றி நவிதலுக்கும் 49 பக்கங்கள் கவிதைகளுக்கும் 2 பக்கங்கள் பிழைத்திருத்தத்திற்கும் தரப்பட்டுள்ளன. "புராட்சிக்கவி" மற்றும் "சஞ்சிசீவிபுரத்தின் சாரல்" என்ற பாரதிதாசனின் இரண்டு படைப்புகள் மொழிபெயர்ப்புக்கு வேண்டி எடுக்கப்பட்டுள்ளன. 'புரட்சிக்கவி' 11-ஆம் நூற்றாண்டின் காஷ்மீரின் ஒரு பெரிய கவிஞரான பிலானாவின் தெற்கு சமஸ்கிருத மறுவாக்கத்தின் சுதந்திரமான தழுவலாகும். அறிமுகத்தில் மொழிபெயர்ப்பாளர் பாரதிதாசனின் வாழ்க்கை மற்றும் படைப்புகளைக் சுருங்கச் சொல்கின்றார். மேலும் அவர் பிலானியம் பற்றியும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் அதன் நேரடி மொழிபெயர்ப்புகள் பற்றியும் விளக்குகின்றார்.

மொழிபெயர்ப்பாளர் எளிமையான மொழி மற்றும் நடையைப் பயன்படுத்துகிறார். இது கவிதைகளை மொழிபெயர்ப்பதற்கு அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களாலும் வாக்கியங்களாலும் வெளிப்படுகிறது. பின்வரும் எடுத்துக்காட்டு இந்தப் புரிதலை எடுத்துக்காட்டி நிற்கும்.

பாரதிதாசன் கவிதை	தக்ஷிணமூர்த்தி**யின் மொழிபெயப்பு**
நாயை இழுத்து புறம்விட்டுப்பீர்-கெட்ட நாவை அறுத்து தொலைக்கு முன்னேல் – இந்தப்	'Drag this dog and throw it away Before I cut its wretched tongue!

பேயினை நான்பெற்ற பெண்ணெனவே சொல்லும் பேச்சை மறந்திடச் சொல்லி டுவீர்!	Advise the devil to refrain From calling itself my daughter!

ஆனால் சில நேரங்களில் அவரது எளிய நடையும் சொற்றொடர்களும் உணர்ச்சிகளாலும் உள்ளுறையும் பொருண்மையாலும் நிரப்பப்பட்ட மூலக்கவிதைகளின் நடையையும் சொற்றொடர்களையும் வெளிப்படுத்த இயலாது போகின்றது. பின்வரும் எடுத்துக்காட்டு இதை வெளிப்படுத்தி நிற்கும்.

பாரதிதாசன் கவிதை	**தக்ஷிணமூர்த்தியின் மொழிபெயப்பு**
கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ! கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாகும்	Would not the command of ones own sweet-heart Very rare to attain Fly and spring up like a stone in air? Even a lofty mountain is a mustard seed To the youth on earth

3.5. பாரதிதாசன் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்-2

"Selected Poems of Bharathidasan" (பாரதிதாசன் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்) என்ற மொழிபெயர்ப்பு நூல் 1991ஆம் ஆண்டில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. இது 409 பக்கங்களை கொண்டது. இதில் 25 பக்கங்கள் முன்னுரை, ஆசிரியரின் குறிப்பு, பாரதிதாசன்: அவரது வாழ்க்கை மற்றும் படைப்புகள், பொருளடக்கம், பாரதிதாசனின் முழுமையான இலக்கிய படைப்புகள் இவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 378 பக்கங்கள் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளுக்கு தரப்பட்டுள்ளன. 4 பக்கங்கள் '*a note on translators*/மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒரு குறிப்பு' என்பதற்கு அளிக்கப்பட்டுள்ளன. 85 கவிதைகள் ஏழு தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தரப்பட்டுள்ளன: அவற்றில் 16 '*On Nature/*இயற்கை' என்ற தலைப்பின் கீழும் 14 கவிதைகள் *'On Love*/காதல்' என்ற தலைப்பின் கீழும், 13 கவிதைகள்'*Tamil/*தமிழில்' என்ற தலைப்பின் கீழும் 11

கவிதைகள் *Emancipation of Women* /பெண் விடுதலை' என்ற தலைப்பின் கீழும், 11 கவிதைகள் *A New Brave World* /ஒரு புதிய துணிச்சலான உலகம். என்ற தலைப்பின் கீழும் 3 கவிதைகள்'*Epic and Drama* /காவிய மற்றும் நாடகம்' என்ற தலைப்பின் கீழும், 16கவிதைகள் *Miscellaneous*/மற்றவை' என்ற தலைப்பின் கீழும் தரப்பட்டுள்ளன. 30 மொழிபெயர்ப்பாளர்கள் தொகுதிக்கு பங்களித்திருக்கிறார்கள்.

மொழிபெயர்ப்பின் நடை நடுத்தரத்திலிருந்து எளிய தரத்திற்கு வீச்சுடையதாக இருக்கின்றது; சில நேரங்களில் மொழிபெயர்பாளர்களின் விருப்பத்தாலும் சில நேரங்களில் மூலத்தின் நடையினாலும் கட்டாயப்படுத்தப்படுகிறது. பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் கவிஞரின் நடை, தொனி மற்றும் பிற கவிதை பண்புக்கூறுகளைப் பின்பற்ற முயற்சி செய்கிறார்கள். பின்வரும் கவிதை வரிகள் இக்கூற்றை எடுத்துக்காட்டும்.

பாரதிதாசன் கவிதை	**மொழிபெயப்பு**
முழு நிலா! அழகு நிலா! முளைத்தது விண் மேலே-அது பழமையிலே புதுநினைவு பாய்ந்தெழுந்தாற் போலே!	Perfect Moon! Beautiful Moon! Sprouted up in the sky Like Fresh thoughts Gushing through the old ones!

மூலப்பொருட்களுக்கான சமமான சொற்கள், சொற்றொடர்கள், கூட்டுகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பது குறித்து கூறுவது பொருத்தமாக அமையும்; அவை மொழிபெயர்ப்பை அசலாகவும் அதே நேரத்தில் பாரதிதாசனின் சாயலுடனும் சித்தரிக்க முயல்கிறன. சூழ்நிலை வேண்டும் போதெல்லாம், சரியான துல்லிய வடிவங்கள் இல்லாத நிலையில் நெருக்கமான வடிவங்கள் அல்லது மாறும் வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. பின்வரும் அட்டவணை இந்தக் கூற்றை தெளிவுபடுத்தும்.

	பாரதிதாசனின் தொடர்கள்	**மொழிபெயர்ப்புத் தொடர்கள்**
1	களிச்சிறு தும்பி	little beetle drunk with joy
2	கண்ணாடிச் சிறகு	glassy wings

3	துளிச்சிறு மலர் இதழ்	tiny petals of the little flowers
4	கிளிச்சிறகாடை	wing garb of the parrots
5	கனியிடை ஏறிய சுழை	succulent pulp inside the fruit
6	முறால் கழையிடை	juice of-full-grown
7	ஏறிய சாறும்	sugar-cane

தேவைப்படும் போதல்லாம் ஆங்கில மொழி கவிதையின் சொல் வரிசைக்கு பொருத்தமாகச் சொற்றொடர்கள் மாற்றப்பட்டு வரிசைபடுத்தப்பட்டு தரப்படுகின்றன. பின்வரும் கவிதை வரிகள் எடுத்துக்காட்டாக இதை வெளிபடுத்தும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
சமைப்பதும் வீட்டுவேலை சலிப்பின்றி செய்யலும் பெண்கள் தமக்கேயாம் என்று கூறல் சரியில்லை!	It is wrong to say That women alone should drudge As cooks at home And cleaners all day.

மேற்கண்ட எடுத்துக்காட்டை உற்றுநோக்கினால் மொழிபெயர்ப்பு மூல மொழியிலிருந்து சிறிது விலகி நிற்பது தெரியவரும். *சமைப்பது, வீட்டுவேலை, சலிப்பின்றி செய்யல்* ஆகிய தொழிற்பெயர்கள் மொழிபெயர்ப்பில். செயலிகளாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வகையிலான சமரசம் தேவைப்பட்டால் மட்டுமே ஒரு மொழிபெயர்ப்பில் அனுமதிக்கப்படலாம்.

மூலக்கவிதை அது எழுதப்பட்டிருக்கும் பண்பாட்டு மற்றும் சமூக பின்னணியின் அடிப்படையில் செறிவுடையதாக இருந்தால், வேறுபட்ட பண்பாட்டையும் சமூகப்பின்னணியையும் கொண்ட இலக்குமொழியில் அதன் மொழிபெயர்ப்பானது வேண்டிய செய்தியைச் சரியாகத் தெரிவிக்காது. கீழ்வரும் மூலக் கவிதை வரிகளும் அவற்றின் மொழிபெயர்ப்பும் இக்கூற்றை எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்தும்.

பாரதிதாசனின் கவிதை	மொழிபெயர்ப்பு
பூரியில் ஒருநாள் நானக், பூதேவர் எனநடக்கும் ஆரியன் ஒருவன் தன்றன் அகல்விழி மூக்கை மூடி நேரில் வருதல் கண்டார் நேர்படும் கோலதிற்குக் கோரினார்;	One day Nanak saw in Puri One Aryan with closed eyes and covered nose, Walking towards him as the God of the Earth Why in such a pose he should appear, he asked,

மேற்கூறிய வகையிலான மொழிபெயர்ப்பு ஒரு மேற்கத்திய வாசகர் முன் வைக்கப்படுமானால், அது முழுமையாகப் பாராட்டப்படும் என்று எதிர்பார்க்க இயலாது; ஏனென்றால் மேற்கத்திய வாசகரின் சமூகக்கலாச்சாரப் பின்னணி இந்தப் பகுதியின் கலாச்சார மற்றும் சமூகப் பின்னணியைப் புரிந்து கொள்ள உதவாது.

3.6. பாரதிதாசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்-3

Selected Poems of Bhrathidasan (பாரதிதாசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்) என்ற மொழிபெயப்புக் கவிதை நூல் பாரதிதாசன் பல்கலைக் கழகம் வெளியிடப்பட்ட அதே பெயரில் 1994இல் வெளியிடப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பானது முருகன் அவர்களால் செய்யப்பட்டது. இதில் 310 பக்கங்கள் உள்ளன. அவற்றில் 20 பக்கங்கள் அறிமுகத்திற்கு தரப்பட்டுள்ளன. 290 பக்கங்கள் மொழிபெயர்க்கப்பட்ட பனுவலுக்குத் தரப்பட்டுள்ளன. 100 தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் மொழிபெயர்ப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கித்துடன் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகளும் மொழிபெயர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் ஆங்கிலம் அல்லாத மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நுல்களைப் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

மொழிபெயர்ப்பாளர் எளிமையான சொற்றொடர்களையும் அறியப்பட்ட சொற்களையும் தேர்ந்தெடுத்து மூலக்கவிதகளை மொழிபெயர்க்க முயற்சித்துள்ளார். மொழிபெயர்ப்பு பின்பற்ற எளிமையானது மற்றும் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு மூலத்தின் முழுவதும் தாக்கத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. முடிந்தவரை

மொழிபெயர்ப்பாளர் மூல நடையைப் பிரதிபலிக்க முயற்சிக்கிறார். பின்வரும் எடுத்துக்காட்டைக் கருத்தில் கொள்ளவும்:

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத் தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!	Tamil too is called the ambrosia! That, the lovely Tamil, is as precious as our life Tamil is called the moon! That, the lovely Tamil, is the water to our society's growth!

சில நேரங்களில் அல்லது பெரும்பாலும் மூலத்தில் உள்ள உணர்ச்சித் தாக்கத்தை மொழிபெயர்க்கப்பட்ட பதிவில் தருவது கடினம். பின்வரும் வரிகள் இதனை எடுத்துக்காட்டும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
தமிழ் எங்கள் பிறவிக்குத்தாய்!-இன்பத் தமிழ் எங்கள் வளர்மிக்க உளமுற்ற தீ!	Tamil is the mother of our genesis! That, the lovely Tamil, is our quickening fire

இலக்கு மொழியின் மொழி அமைப்பு மொழிபெயர்ப்பை மூல நடையை பிரதிபலிப்பதை அனுமதிக்கக்காது. இதனால் மூல உணர்வின் தாக்கத்திலிருந்து மொழிபெயர்ப்பைத் தவிர்த்துவிடும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இனபம் சேர்க்கமாட்டாயா?- எமக் கின்பம் சேர்க்கமாட்டாயா?	When we go sorrow and despondent Will you play on the lute to see us sprightly?

சில நேரங்களில் கவிதை வரிகள் இலக்கு மொழிக்காக மாற்றப்பட வேண்டும். இதன் விளைவாக மூலமொழியின் உணர்ச்சி அம்சம் தியாகம் செய்யப்படலாம்.

பாரதிதாசனின் கவிதை	மொழிபெயர்ப்பு
கண்டேன் மகிழ்ச்சி கொண்டேன்	I found to my joy and ecstasy

உணர்ச்சிகளை வெளிப்படுத்தப் பயன்படும் ஒலிக்குறிப்புச் சொற்கள் ஆங்கில வடிவத்திற்கு பொருந்துமாறு சமரசம் செய்யப்பட வேண்டும்.

பாரதிதாசனின் கவிதை	மொழிபெயர்ப்பு
ஆராரோ ஆரிரோ ஆரரிரோ ஆராரோ ஆராரோ ஆரிரோ ஆரரிரோ ஆராரோ	Hush my dear! Hush a-bye! O my darling

3.7. பாரதிதாசன்: தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்

Bharathidasan: Selected Poems (பாரதிதாசன்: தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்) என்ற நூல் பாண்டிச்சேரியிலுள்ள மொழியியல் மற்றும் பண்பாட்டு நிறுவனத்தால் 1996-இல் வெளியிடப்பட்டது. இது பாரதிதாசனின் கவிதைகளின் பெரிய பதிப்பு ஆகும். இது விர்மர்சன அறிமுகத்துடன் தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கைக் குறிப்பு தரப்பட்டுள்ளது. இது தமிழ் மூலத்தையும் ஆங்கில மொழிபெயர்ப்பையும் தரும் இருமொழி நூலாகும். இத்தொகுதி முழுவதும், பாரதிதாசனின் கவிதைகளின் தமிழ் மூலம் இடது பக்கத்திலும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு வலதுபுறத்தில் தரப்பட்டுள்ளன. 200 கவிதைகள் தொகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் 197 ஆனது தோராயமான காலவரிசை வரிசையில் தரப்பட்டுள்ளன; அதாவது அவற்றின் படைப்பு நாளுக்கு ஏற்ப தரப்பட்டுள்ளன. பதிப்பு ஆசிரியரால் குறிப்பிட்டபடி, *In Our Town* (எங்கள் நகரத்தில்) மற்றும் *I am Prince of Poets* (நான் கவிஞர்களின் இளவரசன்) என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதைகல், அவற்றின் அசாதாரண இயல்பின் காரணமாக காலவரிசை வரிசையில் பொருந்தவில்லை. ஒவ்வொரு கவிதையின் கீழும் மொழிபெயர்ப்பாளரின் பெயர் தரப்பட்டுள்ளது. *Notes to the Poems* (கவிதைகளுக்கான குறிப்புகள்) என்ற தலைப்பின் கீழ் அனைத்து கவிதைகளுக்கும் விளக்கங்களும் சிறு குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. கவிதைகளின் தலைப்பு மற்றும் கவிதைகளின் முதல் வரி

அடிப்படையில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஒவ்வொன்றிற்கான நான்கு சொல்லடைவுகள் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இச்சொல்லடைவுகள் அகரவரிசையில் பக்க எண்களுடன் உருவாக்கப்பட்டுளன இது வாசகர்களுக்கு ஒரு எளிய குறிப்பாக வழிகாட்டும். 14 மொழிபெயர்ப்பாளர்களின் சுருக்கமான வாழ்க்கை குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

கவிதைத் திறனையும் மொழிபெயர்ப்பில் திறமை, அனுபவம் ஆகிய இரண்டையும் வரமாகப் பெற்றவர்கள் எவ்வாறு மூலமொழியின் விளைவை இலக்கு மொழிக்குச் கொண்டு செல்வர் என்பதையும் இந்த நூலில் இருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மொழிபெயர்க்கப்பட்ட வரிகள் எடுத்துக்காட்டுகிறன.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
கவியின் மிக்கதாம் செல்வமொன் றிலயே! கண்மணி கேளடா நீ என்றன் சொல்லையே! செல்வம் பிறர்க்கும் நாம் தந்திடில் தீர்ந்திடும் கல்வி தருந்தோறும் மிகைச் சேர்ந்திடும்	Hark ye to my words, dear one! No wealth there is that is greater than learning Wealth goes when given away The wealth of learning manifold grows when offered.

மொழிபெயர்ப்பாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகரன்கள் பொருத்தமானவையாகவும் சரியானவையாகவும் உள்ளன; பின்வரும் மொழிபெயர்ப்பு வரிகள் இதை எடுத்துக்காடும்.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
கல்வியுள்ளவரே கண்ணுள்ளார் எனலாம்	Deemed only the learned as having eyes
எனக்கில்லை கடவுள் கவலை	About God worried not am I
மனைமக்கள்	house-folk
அறிவியக்கப்புலமை	the power of reason
கனமான கடவுளே	O! Great God!

அரிது சூழலுக்குப் பொருந்தும் வகையில் மூன்று வேறுபட்ட ஆனால் நெருங்கிய தொடர்புடைய மொழிபெயர்ப்பு நிகரன்களால் குறிப்பிடப்படுகிறது.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
அவ்வன் பரிது	her love is supreme
அதுவும் உலகில் அரிது	her love is great
நற்றாய்ச்சீர் ஞாலத்தரிது	Mother's love is rare

பெரும்பாலான கவிதைகள் ஆங்கிலத்தில் எளிமையான நடையில் தரப்பட்டுள்ளன; அதே நேரத்தில் மூலக் கவிதைகளின் பண்புகள் மொழிபெயர்ப்பில் தியாகம் செய்யப்படவில்லை.

பாரதிதாசனின் கவிதை	**மொழிபெயர்ப்பு**
தமிழுக்கும் அமுதென்று பேர்-அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத் தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!	Tamil too is as nectar known! That Tamil, sweet Tamil, Is akin to our dear life! Tamil is as the moon described! That Tamil, sweet Tamil, Is the sap of our society's weal!

3.8. ஒரு சில பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள்

அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பாரதிதாசனின் கவிதைகளின் சில பிரஞ்சு மொழிபெயர்ப்புகளும் உள்ளன. என் பாரவையிபட்ட படைப்புகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

1. L.Cadelis, 1979. L E cume de le mer. *கடல்மேல் குமிழிகள்* என்பதன் பிரஞ்சுமொழிபெயர்ர்பு.

2. Mme.G.David, 1991. Candi, பாரதிதாசனின் நாடகமான கற்கண்டு என்பதன் பிரஞ்சு மொழிபெயர்ப்பு.

3. L.Cadelis. பிசிராந்தையார் என்பதன் பிரஞ்சு மொழிபெயர்ப்பு.

4. முடிவுரை

மொழிபெயர்ப்பில் உரைநடைக்கு முக்கியத்துவம் தரப்படாமல் கவிதைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளன. சில உரைநடை மொழிபெயர்ப்புகள் கவிதை மொழிபெயர்ப்புகளுடன் சேர்ந்து கிடைக்கின்றன. பாரதிதாசனின் கவிதைகள் குறிப்பாக ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்க்கப்படுள்ளன; ஆங்கில மொழிபெயர்ப்பு பிரெஞ்சு மொழிபெயர்ப்பைவிட மேம்பட்டதாகத் தோன்றுகின்றது. பாரதிதாசன் படைப்புகளைப் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளன. நிறுவனம் சார்ந்த மொழிபெயர்ப்புகள் தனி நபர் மொழிபெயர்ப்புகளைவிட அதிகமானவை. சில மொழிபெயர்ப்பு படைப்புகள் தவிர, பெரும்பாலான மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள் இருமொழி படைப்புகளாக இருக்கின்றன; அதாவது, தமிழ் பதிப்புகள் மொழிபெயர்த்த பதிப்புகளுடன் சேர்த்து தரப்படுகின்றன. பாரதிதாசரின் நூற்றாண்டு விழா பல மொழிபெயர்ப்பு முயற்சிகளைக் கண்டது. முடிந்த வரை பாரதிதாசன் கவிதைகள் மூலத்திற்குப் பொருத்தமாக எளிய மொழி நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பல மொழிபெயர்ப்பாளர்கள் மூலமொழி நடையை தக்கவைக்கவோ அல்லது பிரதிபலிக்கவோ முயற்சி செய்கிறார்கள். மொழிபெயர்ப்பாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் பெரும்பாலும் ஒரு சாதாரண இரண்டாவது மொழி ஆங்கிலம் பேசுபவருக்குத் தெரிந்தவையாகவே உள்ளன. மரபுச் சொற்றொடர்கள் மூலத்தை நினைவூட்டுமாறு மிகுந்த வெளிப்படைத்தன்மை கொண்டுள்ளன. மூலத்தில் இருந்து விலகியவை மிகவும் அரிதாகவே உள்ளன. முடிந்தவரை மொழிபெயர்ப்பாளர்கள் மூலக்கவிதையின் தாளத்தை தக்கவைக்க முயற்சி செய்கிறார்கள். தேவைப்படும் போதெல்லாம் சொற்கள் மற்றும் சொற்றொடர்களின் வரிசை முறைகள் இலக்கு மொழிக்காக மாற்றப்பட்டுள்ளன.

BIBLIOGRAPHY

Bharathidasan. 1994. paaratitaacan kavitaikaL. Cennai: maNivaacakar patippakam.

Bharathidasan:Selected Poems. 1996. Pondicherry: Pondicherry Institute of Linguistics and Culture.

Catford, J.C. 1965. A Linguistic Theory of Translaion. London: Oxford University Press.

Chalapathy. 1987. Tranquility. Madras: Apollo Velyyeedu.

Davie, Donald. 1975. Poetry in translation. Milton Kevnes: The Open University Press.

Murugan, V. 1994. Selected Poems of Bharathidasan. Madras: International Institute of Tamil Studies.

Newmark, Peter. 1981. Approaches to Translation. Oxford: Pergamon Press.

Nida, E.A. 1975. Language, Structure, and Translation. Stanford: Sanford University Press.

Parameswaran, P. 1984. Puratchi Kavignar Bharathidasan's Smile of Beauty. Pondicherry: Koo.Amutavalli "Paaratitaacan Kuyil".

Ramalingam, M. 1991. Selected Poems of Bharathidasan. Tiruchirapalli: Bharathidasan University.

Thangappa, 1992. Select Poems of Bharathidasan. Madras: Marxist Periyarist Communist Party.